# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study
in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில்  பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மெள.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2



நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு



The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# சிலம்பில் அரசியல்
# *Politics in Silambu*

**மு.உமாமகேஸ்வரி**
**பதிவு எண்: *17614/Ph.D.K8/Tamil/FT/Change of Guide/July 2014/Dt:10.04.2024***
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் வே.அ.பழனியப்பன்**
உதவிப் பேராசிரியர் — முதல்வர் (பொ.), ஆய்வு நெறியாளர்
தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச் சிவபுரி-622 403,
புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதி சிறப்பித்துப் பாடிய சிலப்பதிகாரம் போன்ற முத்தமிழ்க் காப்பியம் அதற்குப் பின்பு இன்றுவரை தோன்றவில்லை. தமிழுக்குரிய தனித் தன்மையுடைய காப்பியமாக சிலம்பு மட்டுமே உள்ளது. அதுவரை கடவுளையோ அரசனையோ காப்பியத் தலைவனாகக் கொண்ட வெளிவந்த இலக்கிய மரபிலே ஒரு சாதாரண குடியிலே பிறந்த கண்ணகி தெய்வநிலை எய்தியதை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெற்றதை விளக்கும் காப்பியம்தான் சிலப்பதிகாரம்.

**"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"**

என மூன்று உண்மைகளை உரைக்கிறது இச்சிலம்பின் பதிகம். இம்மூன்றில் "அரைசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆவதூஉம்" என்ற உண்மையில் சித்தரிக்கப்பெறும் அரசியல் இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச்சொற்கள்: சிலப்பதிகாரம், அரசியல், ஒருமைப்பாடு, பாண்டியர் பெருமை, கண்ணகி, நீதி.**

*Abstract*

***Bharathi's song "Nenjayalum Silappadikaram" has not appeared to this day. Silambu is the only architecture of Tamil. Until then, in the literary tradition, which has been the leader of the Goddess of God, the Kannaki, who was born in a normal civilization, is the epitome of the goddess of life and the goddess.***

***"Charity survivors***
***The text of the text***
***It is the case that will rise and feed.***

***Three facts speak of the word. In this political article, we will see in the fact that "the claim of the charity for the half -ist survivors".***

***Keywords:*** *Silappadikaram, Politics, Integration, Pandiyar Pride, Kannaki, Justice.*

**அரசுகளின் ஒருமைப்பாடு**

தமிழ்நாட்டின் ஒருபகுதியாகச் சேர நாடாக இருந்து இன்று தனி மாநிலமாகத் திகழும் கேரள மாநிலம் தமிழ்நாட்டு அரிசியை, காய்கறிகளை பால்-இறைச்சிகளை தமிழ்நாட்டினின்று வாங்கிக் கொள்வர்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அங்கு சென்றால் மட்டும் அவமானப்படுத்துவர்கள். முல்லைப் பெரியாரில் நமக்கு அல்லலை விளைவிக்கிறார்கள். கேரளத்துக் கோழி இறைச்சிக் கழிவுகளை, மருத்துவ-இரசாயனக் கழிவுகளை தமிழ்நாட்டு எல்லையில் கொட்டிச் சென்று வீண் வம்பு இழுக்கிறார்கள். இன்று மாநில அரசுகளுடன்

ஒற்றுமை இல்லாதது போலத்தான் சிலம்பு எழுந்த காலத்திலும் தமிழகத்தில் ஒற்றுமையின்மை மிகுதியாக இருந்தது. மூவேந்தர் தம்முள் மனவேறுபாடு கொண்டு போரிட்ட கதைகளையெல்லாம் நம் புறநானூற்றுப் பாடல்களில் அறியலாம்.

தமிழ் மூவேந்தரையும் ஒன்றுபடச் செய்ய ஒற்றுமைப்படுத்த எண்ணிய இளங்கோவடிகள் மூன்று காண்டங்களுக்கும் அவர்தம் தலைநகரங்களின் பெயரைத்தந்தார். சோழவேந்தனின் தலைநகர் புகார் புகார்க் காண்டமாக்கினார். பாண்டியவேந்தனின் தலைநகரம் மதுரை, மதுரைக் காண்டமாக்கினார் சேரவேந்தனின் தலைநகரம் வஞ்சி; வஞ்சிக் காண்டமாக்கினார். மூவேந்தர் ஆளும் பகுதிகளில் கதை நிகழ்ந்ததாகக் காட்ட விரும்பிய இளங்கோவடிகள், சோழ நாட்டில் கண்ணகி பிறந்தாள். பாண்டிய நாட்டில் கணவனை இழந்தாள்; சேரநாட்டில் தெய்வநிலை அடைந்தாள் என்று ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுகிறார். அரசியல் மாண்பை ஆக்கித் தருகிறார்.

**பாண்டியர் பெருமை**

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் செவிகளாலே அந்தணர் ஓதுகின்ற வேத ஒலியினை அல்லாது ஆராய்ச்சி மணியின் ஓசையை ஒருபொழுதும் கேட்டதில்லை. அவன் அடி தொழுது வணங்காத மன்னரே இல்லை. குடிகள் அவனைப் பழி தூற்றியதே இல்லை.

**“மறைநா ஓசை அல்லது யாவதும்**
**மணி நா ஓசை கேட்டதும் இலனே.**
**அடி தொழுது இறைஞ்சா மன்னா; அல்லது**
**குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்” (கட்டுரைக் காதை வரிகள் 31-34)**

குடிமக்கள் பழிதூற்றாதபடி ஆளுகிற திறம் கொண்டவன் பாண்டியன் நெடுஞ்செழியன் மிகச் சிறந்த குடியில் பிறந்தவன்.

கதவைத் தட்டிய குற்றத்துக்காகத் தன் கையைத் தானே துணித்த பாண்டியன். கீரந்தை என்பான் மனைவியைப் பிரிந்து அயலூர் சென்றிருந்தான். அவன் மனைவி தனித்திருந்தாள். நாள்தோறும் நகர்க்காவல் புரிகின்ற பாண்டிய மன்னன் பாதுகாவலில் இருந்தாள். ஒருநாள் இரவு அவ்வீட்டில் பேச்சுக்குரல் கேட்டது. அயலூர் சென்றிருந்த அவள் கணவன் வந்துவிட்டான் என்பதை அறியாத பாண்டியன் அவ்வீட்டுக் கதவைத் தட்டினான். அரசன் பாதுகாவல் அல்லாது வேறுகாவல் இல்லை என்று என்னைக் காவலற்ற இடத்தில் இருத்திச் சென்றீரே, அந்த அரசன் காவல் இன்று என்னைக் காவாதோ? எனக் கூறினாள் அவன் மனைவி. அச்சொல் அரசன் காதில் பழுக்கக் காய்ச்சிய ஆணியினால் சுடுவது போன்று இருந்தது. கதவைத் தட்டிய கையைத் தன் தவறுக்காகத் தானே துணித்துக் கொண்ட பொற்கைப் பாண்டியன் குடியில் பிறந்தவன். அரசன் என்றால் குடிகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்.

**“குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்” (குறள்:549)**

“தம் குடிமக்களைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றுதல் அரசனுடைய தொழில் என்கிறார் வள்ளுவர்.

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்” (குறள்:388)**

என்றும் இறைமாட்சியிலே வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அரசன் தன் குடிமக்களை எல்லாத் தீமைகளிலிருந்தும் காக்க வேண்டும். அவ்வாறின்றி எங்கு பார்த்தாலும் கொலைகள், கொள்ளைகள், வறுமைகள், வழிப்பறிகள், கற்பழிப்புகள் நடந்தால் அப்படி நடப்பனவற்றைப் பற்றிக் கவலைப்படாது பார்த்துக் கொண்டிருந்தால் அந்த அரசனுக்கோ அரசுக்கோஅழகன்று! இதைத்தான் இளங்கோவடிகள்,

**செவிச்சுட்டு ஆணியின் புகைஅழல் பொத்தி**

**நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று**
**வச்சிரத் தடக்கை அமரர் கோமான்**
**உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை**
**குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து**
**இறைக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்கம் இன்மை" (கட்டுரைக் காதை 48-53)**

எனக் கூறுகிறார்.

மக்களைக் காக்கும் பணியிலே கதவைத் தட்டிய குற்றத்துக்காகத் தன் கையையே துணித்துக் கொண்ட கொற்கைப் பாண்டியன் வழிமரபிலே செங்கோலினையும் குறைபடாத வெற்றியினையும் உடைய பாண்டிய அரசன் குடியிலே வந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் பெருமைகள் பற்றி இன்னும் விரிக்கின் விரியும். அத்தகைய பெருமைமிகு பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு சாதாரண குடிமகளிடம் தன் குலப் பெருமைகளையெல்லாம் பறிகொடுத்தான்.

**நீதி கேட்ட கண்ணகி**

கணவன் தன் காற்சிலம்பு கொண்டு விலைபேசி விற்றுவர வந்தவன் கள்வன் எனப் பெயர் சூட்டிக் கொலையுண்டான் எனில் அவள் இதயம் நைந்து போயிருக்கும். நீதி கேட்க கோட்டை கொத்தளம் நோக்கி வருகிறாள் கண்ணகி. வந்தவள் வாயிற்காவலனை நோக்கி,

**"வாயிலோயே! வாயிலோயே!**
**அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து**
**இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!" (வழக்குஉரைகாதை 24-26)**

என்று விளிக்கிறாள். "அறிவு முற்றும் அற்றுப் போன அற நினைவும் அற்றுப் போன நெஞ்சத்தை உடைய, அரச நீதியையும் முறைமையையும் பிழைத்தவனாகிய அரசனின் வாயில் காப்போனே!" என்கிறாள்.

"முடியாட்சிக் காலத்தில் ஒரு சாதாரண குடிமகள் அதுவும் வேற்று நாட்டிலிருந்து வந்து இங்கு பிழைக்க வந்த ஒரு குடிமகள் மாட்சிமை தங்கிய மன்னனை அறிவு அறைபோகிய — அறிவு முற்றும் அற்றுப்போன அரசன் எனச்சொல்கிறாள். தனி ஒரு பெண்ணாக நின்று அரசனை ஏளனம் செய்கிறாள் என்றால் அவளது துணிவையும் பாராட்ட வேண்டும். இப்படி ஒரு சாதாரண குடிமகள் அரசனைக் கேட்கலாம் என்று உரிமை தந்த மன்னனையும் பாராட்ட வேண்டும். முடியாட்சிக் காலத்திலேயே அப்படியென்றால் குடியாட்சிக் காலமாகிய இன்றைக்கு இப்படி நம் ஆளுவோரை நாம் இடித்துரைக்க இயலாது. இடித்துரைத்த காரணத்தினாலேயே அடித்து, உதைத்து, துன்புறுத்தி, ஊருக்கு ஊர் அந்த நபர்மீது வழக்குகள் தொடுக்கப் பெறும்!

வளைந்த செங்கோலைத் தன் உயிர்கொடுத்து நிமிர்த்திய பாண்டியன் நெடுஞ்செழியன். அரசன் முன்னே அழைத்து வரப்பட்ட கண்ணணகியைப் பார்த்து,

**"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்!**
**யாரையோ நீ? மடக்கொடியோய்!" என மன்னன் கேட்க**
**"தேரா மன்னா!" (வழக்குரை காதை 48-50)**

என்கிறாள்.

"ஆய்ந்து அறிகிற அறிவில்லாத மன்னனே! என்கிறாள். இப்படி ஒர்; அரசனிடம்இ ஆளுவோரிடம்இ ஒரு சாதாரண குடிமகன் நேருக்கு நோ; நின்று பேச முடியாது. பேசினால் அவன் உயிh; தப்பாது. இன்றைக்கு சகிப்புத் தன்மை பற்றிப் பேசுகிற நமக்கு அந்த சகிப்புத் தன்மை இல்லை.

செப்புவது உடையேன் -உன்னிடம் ஒன்று கூறுவது உடையேன் என்று சொல்லி

**"எள்அறு சிறப்பின் இமையவா; வியப்பப்**

**புள் உறுபுன்கண் தீர்த்தோன்; அன்றியும்**
**வாயில் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்**
**அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்;**
**பெரும் பெயர்ப்புகார் என்பதியே; (வழக்குரை 51-56)**

என்றும் சொல்கிறாள்.

"தன் நாட்டு மன்னர்கள் பெருமை, தன் குலப் பெருமை இவற்றையெல்லாம் " நீ யார்? என்று வினவிய அரசனின் வினாவுக்கு விடையாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பாங்கு கண்டு எந்த அரசனும் இவ்வளவு பொறுமையாக இருக்க மாட்டான். இக்கால நம்மரசுகள் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. நல்ல அறநெறியில் செல்லாத கொற்கை நகரத்து மன்னனே!"

என்கிறாள்.

**இப்படி ஒரு மன்னனை நேருக்கு நேர் நின்று,**
**"அறிவு அற்றுப் போனவனே! என்கிறாள்;**
**"தேரா மன்னா!" என்கிறாள்;**
**"நல்திறம் படராக் கொற்கை வேந்தே!" என்கிறாள்.**

இவை எல்லாவற்றையும் மன்னன் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

**"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்"(குறள் 448)**

எனும் குறள்வழி கடைக்குடி மகனும் காவலனைக் கண்டு இடித்துரைக்கலாம் என்ற உரிமையைத் தந்து இடித்துரைகள் முற்றையும் கேட்டுக் கொண்டிருந்தது மன்னனின் அரசியல் மாண்பு.

"என் கால் சிலம்பில் உள்ளவை மாணிக்கப் பரல்கள்"என்று கண்ணகி கூறுகிறாள். "எம் சிலம்பு முத்துப் பரல்களை உடையது" என்று சொல்லிவிட்டு கோவலனிடமிருந்து திருட்டுச் சிலம்பெனக் கருதிப் பெற்ற சிலம்பினைத் தருமாறு கூறி அதைக் கண்ணகி முன் வைக்கிறான் மன்னன்; அதைக் கையினால் எடுத்து உடைக்கிறாள் கண்ணகி அதிலிருந்து வந்த மாணிக்கப் பரல் பாண்டியன் முகத்தே தெறித்து வீழ்ந்தது. வளையாத செங்கோல் வளைந்ததை உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன்,

**"............................... மணி கண்டு**
**தாழ்ந்த குடையன்;தளர்ந்த செங்கோலன்**
**பொன் செய் கொல்லன் தன்சொல் கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்;**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என்முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள் என**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே.." (வழக்குரை காதை 72-78)**

என்கிறார் இளங்கோவடிகள்.

தான் ஆராயாது செய்த தவறினைத் தவறு என்று ஒப்புக் கொள்கிறான்! எந்த மன்னனும் தான் செய்த தவறினைத் தவறு என்று ஒப்புக் கொள்வதில்லை.எந்த அரசும் இப்படித் தான் செய்த தவறைத் தவறு என்று ஒத்து கொள்வதில்லை. ஆனால் பாண்டியன் நெடுஞ்செழியனோ தான் செய்த தவறினைத் தவறு என்று . ஒப்புக்கொண்டதோடு மட்டுமல்லாமல் தவறுக்காக வளைந்த செங்கோலை நிமிர்த்துவதற்காக தன் உயிரையேக் கொடுத்து நீதியை நிலை நாட்டுகிறான்.

**அஃறிணைக்கு நீதி வழங்கிய சோழ மன்னன்**

ஓர் உயிருக்கு ஈடாகத் தன் உயிரையே தந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் நீதி நெறிஇஅரசியல் மாண்பு போற்றுதற்குரியது. ஆராய்ச்சி மணியின் நா அசைகிறது; கன்றினை இழந்த பசு கண்ணீர் சொரிகிறது. இது மன்னன் நெஞ்சைச் சுடுகிறது. தான் பெறுதற்கரிய ஒரு மகனைத் தன் தோக்காலில் இட்டுக் கொன்று கன்றின் உயிருக்குத் தன் மகனின் உயிரைக் கொடுத்து நீதி வழங்கிய மனுநீதிச் சோழ மன்னனின் நீதிநெறி அரசியல் மாண்பு — ஆராய்ந்து பாராது பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொன்றபின் தனது செயல் தவறு என்று உணர்ந்ததும் தன் உயிரையேக் கொடுத்து நீதியை நிலை நாட்டிய பாண்டியன் நெடுஞ்செழியனின் உயர்ந்த மாண்பு நெஞ்சம் நெகிழ்கிறது. இப்படிப்பட்ட மன்னர்களும் இங்கு இருந்திருக்கிறார்கள்; உயர்ந்த அரசியல் மாண்பினைக் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்பதைச் சிலம்பிலே அரசியல் மாண்பாக இளங்கோவடிகள் அழகாகச் சித்தரித்திருக்கிறார்.

போர்க்களத்திலே மடிந்த திறம்சால் வீரார்களுக்கு, ஆடவருக்கு நடுகல் நாட்டி வழிபடுவது வழக்கம். ஆனால் கண்ணகியோ போர்க்களத்தில் மாளவில்லை; மன்னனின் அவைக்களத்திலே சொற்சமர் புரிந்து பாண்டியனை வென்றாள், அந்தப் பெண்ணுக்கு நடுகல் நாட்டி, தெய்வமாக்கி வழிபட்டது இளங்கோவடிகள் செய்த புதுமை; புரட்சியும் கூட.

**இமயம் சென்று பதினெண் நாழியில்**<br>
**பகையைக் கொய்திட்டான்.**<br>
**இமயக் கல்லை எடுத்தவர் தலையில்**<br>
**சுமக்கச் செய்திட்டான்.**<br>
**உத்தமி பத்தினி கண்ணகித் தாய்க்குக்**<br>
**கோவில் சமைத்திட்டான்**<br>
**பத்தினிக் கல்லில் அவள்திரு உருவை**<br>
**ஆங்கே அமைத்திட்டான்.**<br>
**பகையை மறந்து பாண்டியா; சோழர்**<br>
**கயவா கைஅழைத்தான்**<br>
**பகலவன் ஒளியினும் ஆற்றல் மிக்கது**<br>
**பத்தினிக் கண்ணொளியாம்."**

**(ச.தோ.தமிழ்மாறனின் உருகுவதை விட்டுவிடு கவிதை நூலிலிருந்து)**

**முடிவுரை**

அரசியலில் ஓர் ஒருமைப்பாட்டை நமக்கு உணர்த்தி, பாண்டியனின் பெருமையைப் புலப்படுத்தி, குற்றத்துக்காகத் தன் கையைத் தானே துணித்துக் கொண்ட பாண்டியனைக் காட்டி, நீதிகேட்ட கண்ணகியைப் படம்பிடித்து வளைந்த செங்கோலைத் தன் உயிர் கொடுத்து நிமிர்த்திய பாண்டியன் நெடுஞ்செழியனையும், பசுவிற்கு நீதி வழங்கிய சோழ மன்னனைக் காட்டி சோழ நாட்டுக் கண்ணகிக்காகச் சேர நாட்டில் கோயில் எழுப்பிய சேரன் செங்குட்டுவனைக் காட்டிய இளங்கோவடிகள் ஆட்சியாளர்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்; குடிமக்களிடம் இப்படித்தான் பரிவுடன் அவர்தம் கோரிக்கைகளைக் கேட்க வேண்டும்; இப்படித்தான் நீதிநெறியை முறை செய்ய வேண்டும் என்று காட்டிய இளங்கோவடிகள், ஆளுவோருக்குப் பெருந்தன்மை, சகிப்புத்தன்மை இருக்கவேண்டும் என்பதையும் காட்டுகிறார். இவ்வாறு சிலம்பில் அரசியலையும் அரசியல் மாண்பையும் அழகாகக் காட்டுகிறார் இளங்கோவடிகள். இதை இன்றைய அரசியலாளர்கள் பின்பற்றினால் நாடும் செழிக்கும். மக்கள் நலன் சிறந்தோங்கும்.

**துணைநூற் பட்டியல்**

அறிவுடை நம்பி, பு. **சிலப்பதிகாரம் காட்டும் அரசியல்.** சென்னை: காவ்யா பதிப்பகம், 2010.

இராசமாணிக்கனார், மா. **தமிழக ஆட்சி.** சென்னை: பாரி நிலையம், 1972.

*சாமிநாத சர்மா, வெ.* ***அரசியல் வரலாறு.*** *சென்னை: சந்தியா பதிப்பகம், 2003.*
*சாமிநாத சர்மா, வெ.* ***புராதன இந்தியாவில் அரசியல்.*** *சென்னை: பூங்கொடி பதிப்பகம், 2000.*
*சிதம்பரனார், சாமி.* ***சிலப்பதிகாரத் தமிழகம்.*** *சென்னை: இலக்கிய உலகம், 1988.*
*வேங்கடசாமி நாட்டார், ந. மு. (உ.ஆ.).* ***சிலப்பதிகாரம்.*** *சென்னை: சாரதா பதிப்பகம், 2013.*

## *References*

*Arivudainambi, P.* ***Silappathikaram Kattum Arasiyal.*** *Chennai: Kavya Pathippagam, 2010.*
*Rasamanickanar, M.* ***Tamizhaga Aatchi.*** *Chennai: Pari Nilayam, 1972.*
*Saminatha Sharma, V.* ***Arasiyal Varalaru.*** *Chennai: Santhiya Pathippagam, 2003.*
*Saminatha Sharma, V.* ***Purathana Indiavil Arasiyal.*** *Chennai: Poongodi Pathippagam, 2000.*
*Chidambaranar, Sami.* ***Silappathikarath Tamizhagam.*** *Chennai: Ilakkiya Ulagam, 1988.*
*Venkatasamy Nattar, N.M. (Ed.).* ***Silappathikaram.*** *Chennai: Saratha Pathippagam, 2013.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் ARAN International e-Journal of Tamil Research அரண்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com